# கேகாலை பிரதேச சபை

## <u>கேகாலை மாவட்டம்</u>

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜுன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் **பந்**தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

1.3.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இரண்டு நிதிப் பாய்ச்சலின் கீழ் ஒப்பந்தம் கைச்சாத்திடாத ரூபா. 841,935 பெறுமதியான 03 வேலைகளை மூலதனமாக்கியதால் 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு வேளைக் கடன்பட்டோர் மற்றும் வேளைக் கடன்கொடுத்தோர் ரூபா. 841,935 வினால் நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற அபராத வருமானம் ரூபா. 9,196,456 ஆயினும் அதனை ரூபா. 8,870,000 என கணக்கீடு செய்யப்பட்டதனால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு

வருமானக் கடன்பட்டோர் ரூபா. 326,456 வினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சரவையின் ஒதுக்கீட்டின் கீழ் கேகாலை இயைஞர் படையணியின் கௌரவ மேடை அமைப்பதற்குரிய முடிவுறும் வேலைப் பெறுமதி ரூபா. 633.872 வினை கணக்கீடு செய்யப்படாததனால் 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு வருமானக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா. 633,872 வினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டு மொத்தம் ரூபா. 3,214,511 ஆன 03 வருமான விடயங்கள் சரியான வேலைத்திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.2 <u>இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்</u>

02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டு மொத்தம் ரூபா. 1,298,951 ஆவதுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா. 1,294,359 ஆக இருப்பதுடன் ரூபா. 4,592 வேறுபாடாக இருந்தது.

1.3.3 <u>பெற வேண்டிய கொடுக்க வேண்டிய கணக்குகள்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 99,188,074 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா.17,954,858 ஒரு வருடத்திற்கும் மேலான பழைய மீதியாகும்.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் கொடுக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 70,794,829 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா.439,550 ஒரு வருடத்திற்கும் மேலான பழைய மீதியாகும்.

1.4 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை</u>

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி.1646 | சபைக்குரிய 09 வாகனங்கள் தொடர்பாக வாகன ஓட்டக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 ஏப்ரல் 17 ஆம் திகதி 1597/8 ம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை. | சபை அதிகார எல்லைக்குள் நிர்மானிக்கப்பட்டிருந்த 11 தொலைத் தொடர்புக் கோபுரங்கள் தொடர்பாக அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 09/2009 இலக்க மற்றும் 2009 ஆம் வருட ஏப்ரல் 16 ஆம் திகதி சுற்றுநிரூபம் | ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்ள கைவிரல் அடையால இயந்திரம் பயன்படுத்த வேண்டும் என்பதுடன் அதன் அறிக்கை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை குறிப்பிட்டு இருந்தும் அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ருக்க வில்லை.அத்துடன் ரூபா. 55,000 செலவு செய்து பொருத்தப்பட்டிருந்த கைவிரல் அடையால இயந்திரம் 2016 ஏப்ரல் முதல் பயன்படுத்தப்படாது இருந்தது. |

## 1.3.2 <u>நிதி மீளாய்வு</u>

## 2.1 <u>நிதி விளைவு</u>

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 24,367,221 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 22,502,259 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 1,864,962 அதிரிப்பைக் காண்பித்தது.

## 2.2 <u>பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு</u>

நிதி விளைவுகள் ரூபா. 1,864,962 தொகை அதிகரிப்புக்கு 07 வருமான விடயங்களின் அதிகரிப்பும் 02 செலவின விடயங்களில் குறைவும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | | | | | 2016.12.31 இல் நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 390 | 121 | 3,204 | 2,174 | 269 | 1,030 | 1,299 |
| ii | வாடகை | 223 | 96 | 1,945 | 1,945 | 127 | - | 127 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | 1,613 | 1,613 | - | - | - |
| iv | ஏனைய வருமானம் | 37,392 | 27,764 | 59,569 | 34,861 | 9,628 | 24,708 | 34,336 |
| | மொத்தம் | 38,005 | 27,981 | 66,331 | 40,593 | 10,024 | 25,738 | 35,762 |

2.3.2 <u>அனுமதிப்பத்திரக் கட்டணம்</u>

2000 ஆம் வருட 53 ம் இலக்கம் மற்றும் 1988 ஆம் வருட 56 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 ஆம் வருட 47 ஆம் இலக்கத்தினையுடைய தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 1533/16 மற்றும் 2008 ஜனவரி 25 ஆம் திகதி அதி விசேட வர்த்தமான அறிவித்தலின் படி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 05 வியாபார நிறுவனங்களினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாததால் சபைக்கு ரூபா. 20,000 கிடைக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 <u>வேறு வருமானம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) சபைக்குரிய ஜே.சீ.பீ. இயந்கிரம் இரண்டு சந்தர்ப்பங்களில் வாடகை கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய வாடகை ரூபா. 40,800 வினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) தொலைத் தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக ஒரு கோபுரம் தொடர்பாக ரூபா. 3,000 படி வருடத்திற்குரிய அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தும் சபையின் அதிகார எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த 04 தொலைத் தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாததனால் சபைக்கு ரூபா. 12,000 வருமானம் கிடைத்திருக்கவில்லை.

(இ) சபின் அனுமதியினைப் பெறாது சபையிற்கு அருகில் 4 சதுர அடி அளவிலான 15 க்கும் அதிகமான பேனர்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான கட்டணம் அறவிடுவதற்கு சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) கரடுபன சந்தியில் அமைந்திருக்கும் 212 சதுர அடியிலான 03 நிரந்தர விளம்பரப் பலகைகளுக்கான கட்டணம் அறவிடப்படாததால் சபைக்கு ரூபா. 31,800 வருமானம் கிடைத்திருக்கவில்லை.

2.3.4 <u>நீதிமன்ற அபராதம் மற்றும் முத்தரைக் கட்டணம்</u>

மாகாண சபையின் பிரதான செயளாலர் மற்றும் வேறு அதிகாரிகளிடமிருந்து 2016 திசம்பர் 31 திகதிக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற அபராதம் ரூபா. 5,915,591 மற்றும் ரூபா. 26,150,786 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்திறன்

(அ) 2016 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் மற்றும் கிராமிய உட் கட்டமைப்பு வசதி மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் அந்த வருடத்தில் ஆரம்பிக்கப்படாததனால் ரூபா. 3,106,243 பெறுமதியான 15 வேலைத் திட்டங்களுக்கு மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

உள்ளூராட்சி நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகளுக்காக பயன்படுத்துவதற்காக திவி நெகும அபிவிருத்தி தினைக்களத்தின் ஒதுக்கீட்டின் மூலம் வழங்கப்பட்ட 95 கல்வனைஸ் கம்பங்கள் குறைவாகக் காணப்பட்டது.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

வாகனங்களுக்குரிய லொக் புத்தகம் புதுப்பிக்கப்படாதிருந்தது.

3.4 விளைவற்ற / குறைவாகப்பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்.

சபைக்குரிய 02 வாகனங்கள் 05 முதல் 25 வருட காலமாக பயன்படுத்தப்படாது இருந்ததுடன் அவ்வாகனங்களை பழுது பார்த்து மீண்டும் அதனைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொன்றிருக்கவில்லை.

3.5 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) முன்கலவை (பிரிமிக்ஸ்) தயாரிக்கும் போது சபை பயன்டுத்துகின்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப நியமத்தினை கணக்காய்வுகு சமர்ப்பிக்கவில்லை.

(ஆ) முன்கலவை (பிரிமிக்ஸ்) தயாரிக்கும் போது பொருட்கள் வழங்கும் பதிவேட்டின் படி 2015 ஆம் வருடம் மற்றும் 2016 ஆம் வருடம் முன்கலவை 93 கியூப் மற்றும் 35 படி 128 கியூப் தயாரிக்கப்பட்டிருக்க

வேண்டியிருந்தும் பதிவேட்டின் படி 101 கியூப் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 27 கியூப் குறைவாகக் காணப்பட்டது.

(இ) முன்கலவை (பிரிமிக்ஸ்) தயாரிக்கும் போது மணல் சேர்ப்பது முன்கலவை (பிரிமிக்ஸ்) தயாரிக்கும் முன்னர் மதிப்பீடு தயாரிக்காததது, உற்பத்தி செய்யப்பட்ட முன்கலவை (பிரிமிக்ஸ்) இருப்புப் பதிவேட்டில் பதியாதது போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

3.6 <u>திண்மக் கழிவு முகாமைத்துவம்.</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) சபையினால் தற்போது திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாததுடன் சபையின் அதிகார எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுகள் மொரொன்தொட்ட சந்தைக்குரிய நிலத்தில் குழியொன்றினுல் போடப்பட்டு வருகின்றது.

(ஆ) சாத்தியக் கூற்று ஆய்வொன்றை மேற்கொள்ளாது திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மொரொன்தொட்ட ஹால்மெஸ்ஸ லுனுகல வத்த காணிக்கு உட்பிரவேசிக்கும் பாதை மற்றும் பாலம் நிர்மானிப்பதற்காக ரூபா.23,970,000 செலவு செய்ய வேண்டியிருப்பதுடன் அவ்வாறான நிதிப் பெறுமதி சபையில் காணப்படாததுடன் வேறு நிறுவனங்களின் ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளாது காணி கொள்வனவு செய்தது மற்ற செலவுகளுக்காக இது வரை செலவு செய்யப்பட்ட ரூபா. 4,286,322 விளைவற்றதாக காணப்படுகின்றது.

4. <u>கணக்களிப்பொறுப்பும் நல்லாளுயையும்</u>

4.1 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

மீளாய்வாண்டிற்காக சமாப்பிக்கப்பட்ட பாதீட்டில் செலவுவிடயங்கள் 08 தொடர்பாக மொத்தம் ரூபா. 414,500 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவுவிடயங்கள் 09 தொடர்பாக ஒதிக்கீடு நூற்றுக்கு 46 இருந்து 97 வரை நூற்று வீதத்திற்கு சமமாக ரூபா. 1,075,016 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை

4.2 உள்ளக கணக்காய்வு

1988 பிரதேச சபை ( நிதி மற்றும் நிர்வாக) விதி 5(7) பிரிவின் படி நிதி மற்றும் இருப்பு தொடர்பாக போதுமான உள்ளகக் கணக்காய்வுவொன்று நடாத்திச் செல்லப்படவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | அவதானிக்க வேண்டிய விடயம் |
| --- | --- |
| (அ) சொத்துக் கட்டுப்பாடு | (i) இயந்திரம் மற்றும் வாகன சரியான முறையில் பயன்படுத்தபடவில்லை.<br>(ii) இருப்புப் பதிவேடு நடாத்திச் செல்லப்படவில்லை. |
| (ஆ) உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் பரிசேதனை | (i) உள்ளக கணக்காய்வு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படடிருக்கவில்லை.<br>(ii) சபையின் ஊழியர்களது வருகை மற்றும் வெயிச் செல்வது சரியபன முறையில் பதிவு செய்யப்பாட்டிருக்கவில்லை. |
| (இ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) வருடத்தின் இறுதியில் சரியான பொறுமதியினை கவனத்திற் கொண்டு கடன்பட்டோர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>(ii) நீதிமன்ற அபராதம், முத்தரைக் கட்டணம் மற்றும் வேலைகளுக்கான நன்கொடையின் சரியான பொறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) வருமான நிர்வாகம் | (i) | விளம்பரப் பதாகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | பாரிய சூழல் பாதிப்பிற்குரிய தொலைத் தொடர்புக் கம்ப வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு சரியான முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | நீண்ட காலமாக தீர்க்கப்படாத கடன்கொடுத்தோர் மீதி காணப்படுகின்றது. |